TERMS OF SUBSCRIPTION

| | R. C. |
|---|---|
| In Advance per annum..... | 4-00 |
| In Advance per 6 months.... | 2-00 |
| In arrears per annum..... | 6-00 |
| In arrears per 6 months.... | 3-00 |

Postage extra, R. 1 for Ceylon Rs. 1 for India and Rs. 5, Europe.

CHARGES FOR ADVERTISEMENTS.

| | |
|---|---|
| Under 12 lines...per line..... | 16 |
| Above 12 lines...per line..... | 10 |
| One fourth of a column..... | 3-00 |
| Half a column..... | 5-00 |
| Tree fourths of a column ... | 7-00 |
| One column..... | 9-00 |

# The Jaffna Catholic Guardian.

# கத்தோலிக்குப் பாதுகாவலன்.

PUBLISHED EVERY SATURDAY.

"Nisi Dominus custodierit civitatem frustra vigilat qui custodit eam."

கையொப்பவிகிதம் .ரூ.ச

| | |
|---|---|
| ஹும் க-க்கு முற்பணம்.....4-00 | |
| சு-மாசத்துக்கு முற்பணம்...2-00 | |
| ஹும். க-க்கு பிற்பணம்.....6-00 | |
| சு-மாசத்துக்குப் பிற்பணம்...3-00 | |
| தபால்செலவு | இலங்கைக்கு..1-00 |
| | இந்தியாவுக்கு.1-00 |

விளம்பர விகிதம்

| | |
|---|---|
| 12 வரிக்குள் வரி-க-க்கு..... | 16 |
| 12-க்குமேற்படில் வரி க-க்கு | 10 |
| கால் கொலத்துக்கு (28 வரி.) | 300 |
| அரைக்கொலத்துக்கு..... | 5-00 |
| முக்காற் கொலத்துக்கு. | 7-00 |
| ஒருகலத்துக்கு ..... | 9-00 |

VOL. XVIII. JAFFNA, SATURDAY OCTOBER 7TH 1893 NO 38

## NOTICE

**WANTED A CONTRACTOR.**

To victual the BOARDING ESTABLISHMENT of St. Patrick's College.

Applications will be received in the College till the 20th of October by the Principal from whom the necessary particulars may be obtained.

## ORDER NISI

*In the District Court of Jaffna.*

*Testamentary Jurisdiction* } No. 575

Class. 1.

In the Matter of the Estate of the late Casinather Suppar of Vannarponne East.

Deceased

Casipillai Thiagarajah of Vannarponne East.

Petitioner

*Versus*

1. Suppar Ramalingam of Vannarponne East.
2. Suppar Arumugam of do. and
3. Chellamma. daughter of Ampalavarnar of do.

Respondents,

This matter of the Petition of Casippillai Thiagarajah of Vannarponne East praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Casinather Suppar of Vannarponne East coming on for disposal before Patrck William Conolly Esquire, District Judge, on the 22nd day of September 1893. in the presence of Messrs CASIPPILLAI and CATHIRAVELU, Proctors, on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 20th day of September 1893. having been read, it is declared that the Petitioner is a Creditor of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 16th day of October 1893, show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 25th day of September 1893.

P. W. CONOLLY.
*District Judge.*

## CEYLON SAVINGS BANK.

(*Established 1832.*)

*President.*—The Hon'ble the COLONIAL SECRETARY, *Ex Officio.*

**Remittances**

CAN be made through every Kachcheri, or by Cheques, Drafts, Inland Money Orders and Postal Orders payable in Colombo to order of the Secretary. Attention of Depositors is particularly invited to Rule No 8 regarding attestations of Signatures on withdrawals.

**Letters addressed "On H. M. S."**

To the SECRETARY, CEYLON SAVINGS BANK will pass free of postage.

**Deposits and withdrawals**

may be made between the hours of 11 and 2, Saturdays, Sundays, and Holidays excepted.

(Signed) W. J. GORMAN,
*Secretary, C. S. Bank*

## FINE OPPORTUNITY.

| | Rs. Cts. |
|---|---|
| Mellins Food (The best and the most nutritious food for infants) | 1—12½. |
| Fellow's Syrup | 2—25 |
| Kepler Malt Extract Cod Liver Oil | 1—62½. |
| Scott's Emulsion of Pure Cod Oil | 2—00. |
| De Jongh's Cod oil, Light Brown | 1—75. |
| Kepler's Malt Extract | 1—62½. |
| Ghonorhea drops (The best and sure) | 5—00. |
| Iodised Sarsaparilla | 3—50. |
| Alofas Specific for Asthma | 1—50. |
| Lalors Phosphodyne | 2—75. |
| Painkiller | 1—00. |
| Corn flour for infants | —50. |
| Leibig's Extract of Meat | 1—25. |
| St. Jacob's oil (for Rheumatism) | 1—50. |
| Edward's Harlene (for the hair) | 1—25. |
| Henry's Thilum (for sprains', swelling) | —50. |

Ward & Davy
Druggists and Genl. Merchants
Navalar Premises
Jaffna.

## READ AND SEE.

The cheapest in Jaffna.

Liquors of the most approved Brand,

A variety of goods consisting o Oilman stores, Glasswares, Cutlery tationary, Confectionary, Toys Lamps, Perfumes.

All of the best quality can be had at moderate charges from the undersigned

A. M. Bastiampillai
Main Street,
Jaffna
August 1893.

N. B. A trial order is earnestly tlsiced.,

A. M. B

## CHURCH NOTICE.

*Sunday 8th October 1893.*

AT THE CATHEDRAL

| | |
|---|---|
| Mass | 5. 15 A. M. |
| " | 6. 30 A.M. |
| " | 8. 30 A.M. |
| Benediction. | 5 15 P. M. |

AT ST. JAMES,

| | |
|---|---|
| Mass | 5. 15 A. M. |
| Benediction | 4. 30 P. M. |

## Telegraphic Summary

**Mr. Gladstone Threatens the House of Lords.**

London, September 27th.—Mr. Gladstone arrived at Edinburgh today, and met with a most rapturous reception from large crowds in the streets. The hall where he spoke was thronged with his supporters. Mr. Gladstone, in a speech made on the occasion, said his efforts in favour of Home Rule had in nowise failed. The claims of Scotland and the rest of the Kingdom were equally just; but Ireland, he said, barred all other legislation, and for this the Lords would be answerable. The Home Rule Bill was thoroughly before the people, and to dissolve Parliament o ing to its rejection by the Lords would be unconstitutional, a monstrous innovation, and a treason to a great nation who had a title to govern themselves. Home Rule, he said, was not the only question for the electors, but the existence of the Lords, who would, possibly, bitterly lament raising the issue of a question which would be revived before the expiration of another session; and it would be the duty of the majority to find a means to reach the goal.

**Lord Cromer Declines the Viceroyship.**

London, September 28th.—The *Times* states that Lord Cromer, who is starting today for Egypt, was offered the post of Viceroy of India, but declined on private grounds.

**Why India awaits a Viceroy.**

London, September 29th.—The *Asiatic Quarterly Review* says that the delay in the appointment of a successor to Lord Lansdowne is due to no nominee pledging himself to suppress the opium traffic, to reduce military expenditure, and to support the Indian Congress.

**The Russian Squadron.**

Paris, September 28th.—President Carnot has abandoned his intention of going to Toulon to welcome the new Russian Mediterranean squadron on its arrival there. This is probably in deference to the Czar's wish to avoid exuberant political demonstration on the occasion.

**France and Siam.**

London, September, 29th.—M. de Villiers, the special French envoy at Bangkok, has adopted a more conciliatory tone, and abated some of his demands. A peaceful settlement is, therefore, excepted.

London, October, 2nd.—A final treaty between France and Siam has been concluded, and will be signed on the 3rd instant.

London, October 2nd.—According to the final treaty that has been concluded between France and Siam, the French will remain at Chantabo n until the left bank of the Mekong and the Central Zone are evacuated and pacified.

**A Russian Coaling Station.**

London, September 30th.—It is currently rumoured at Bangkok that the French have agreed to cede Kohsamit, in the Gulf of Siamto Russia as a coaling station.

**An Eironicon for India.**

London, October 1st.—An article has appeared in the *Asiatic Quarterly Reivew* by Dr. Leitner in which, quoting from the Koran, he says Mussulman traditions and practice show the sheep, goats or camels, but not cows, may be sacrificed on the Eed Festival, and, for the sake of the peace of India, he appeals to Indian Mussulman to cease cow-killing.

**The Rebellion in Argentina.**

London, October 1st.—Latest advices from Argentina state that the rebellion there is almost quelled.

**An Ignominious Sentence.**

London, October 1st.—The man who lately threw the bomb which caused such havoc at Barcelona has been sentenced to be shot in the back.

**Obituary.**

London, October 2nd.—The death is announced of Professor Jowett.

## Local &c

**The Papal Delegate** MGR. ZALESKI has returned to Kandy from Trichnopoly, accompanied by His Lordship the Bishop of Madura and the Vicar General of Quilon.

**His Grace Dr. Melizan** writes that his health has so much improved of late that he intends to leave Europe for his Archdiocse at the commencement of November. *C. C. Messenger* 29th Sep

**Mgr. Vistarini**, we (*the C. C. Messenger*) are happy to be able to announce, has almost passed through the crisis mentioned in our last. The last sacraments of the Church were administered to the venerated prelate, but he has since rallied very much and there is little in his present state of health to inspire any fear.

**Parappankandel.** Pursuant to a Notice published in the *Government Gazette* of the 1st, 8th, and 15th September last, "a meeting of the Vicar and Members of the Congregation of the Church of Our Lady of Assumption, situated at Parappankandel" was to be held on the 1st October "for the purpose of bringing the said Church under the operation of Ordinance No, 5 of 1864." On the day in question about 500 Catholics belonging to the Church assembled at Parapparkandel, but strangely enough, neither the Vicar, L. M. Soares, nor the four others, who signed the notice convening the meeting, were present. Why did they keep away? Presumably because they found themselves in a small minority. More anon. *Cor.*

**Mannar.** We have received a correspondence from Mannar, describing the strong public feeling against the recent appointments made or recommended in consequence of the vacancy caused in the Musali Adigarship by the death of Seemampillai Mudalyar. If there is any district in the Island with a distinctive claim to be considered Catholic, that district is Mannar. In such a district the appointment of two closely related Hindus as Chief Headmen of two adjoining divisions with an overwhelming Catholic population, is a piece of bad policy as objectionable as it is totally uncalled for.

**hree sad and fatal accidents** occurred about the close of last week, one in the North, the second in the West and the third in the East of the Island.

The first was a carriage accident, on Friday last, at Point Pedro, resulting in the sudden death of the Revd Mr. Newham, a young Wesleyan Missionary stationed at Kaddavelli. From Kaddavelli Mr. Newham had come to Point Pedro to see the Revd Mr. Trimmer and party off to Trincomalie whither they were going to be present at the wedding of the Revd. Mr. Weaver. Having accompanied Mr. Trimmer on board the *Lady Gordon*, Mr. Newham returned and took a drive with Miss Lamb (a School mistress under the Weslyan Mission) and one of Mr. Trimmer's children. There was a procession passing and at the sound of the tom-tom, the horse became so restive as to dash furiously along the road and then turn suddenly and jump over the parapet wall near the Wesleyan Mission House and fall into the deep water-course, dragging the carriage into it. Poor Mr. Newham was found on the roadside at the foot of the wall, with his head and chest very seriously injured. He was removed to the Government dispensary and very carefully attended to, but expired in about an hour; The other occupants in the carriage, Miss Lamb, and a child of Mr. Timmer's fell with the carriage into the pit and were severely shaken, but they are out of danger. The horse which did all the mischief was not much hurt. This sad accident has evoked public sympathy. Mr. Newham's remains were removed after the inquest, to Jaffna and the funeral took place on Sunday last, *Cor.*

To the lamented death from drowning of Mr. Crawford, a rising member of the Ceylon Civil Service, reference is made in another column.

The third accident, the most saddening of all, in view of the great loss of life, took place at.

**Batticaloa.**—A correspondent telegraphed to us as follows on Sunday last:—"Sad fearful accident on Friday 29th. Six pupils, Pieterson teacher of St. Michael's and Augustine, Father Meary's attendant, drowned whilst sea bathing, Sudden under-current carried them beyond their depth. Fathers and teachers did their best to save. Father Meary rescued four pupils. Augustine drowned while attempting to rescue. No imprudence on the part of fathers or pupils, as all were bathing near shore. Universal and heart-felt sympathy felt for fathers and bereft families.

**Medical.**—The following changes take effect this month:—Sub-Assistant Colonial Surgeon Kylasapulle from Mehintale to Mannar and Sub Assistant Colonial Surgeon Muttukumaru from Mannar to Chavakachcherri.—*Ceylon Observer.*

**The Acting Registrar General**, Mr. P. Arunachalam was here on Monday and part of Tuesday last, inspecting the Registrar of Lands' Office. He also instituted an inquiry in conjunction with Mr. Constantine, touching the genuineness of certain deeds and the Notaries concerned were let off with a warning. An old Notary of Wannarponnai was asked to retire, as the Registrar General considered him to be unfit for further service. Mr. Arunachalam left this on Tuesday last. He visits Mullaitivu, Trincomalie and Batticaloa and returns to Colombo *via* Badulla.—*Cor.*

**The Cocoanut Planting interest** of the Pachchillapalli district of the Jaffna peninsula has suffered considerably by the present protracted drought. Not a few trees in many of the estates have died; and large numbers of trees are reported to be drooping. The rainfall since January last has been very meagre; and the Cocoanut estates in the district have been more or less affected in consequence. Planters have reason to anticipate a bad crop, as it will take a year or two for the trees affected by the excessive heat and the absence of rain to revive fully and come into bearing again. The price of copperah is rising; a candy now fetches Rs. 48.—*Cor.*

**Mr. John Rodrigo**, the Post Master of Pallai has just severed his connection with the Postal Department, after a faithful and an efficient service of seven years. Having recently purchased an estate of over 300 acres in extent, he is now engaged in cocoanut planting which is surely far more paying than the postal service in which he commenced life.

**Sessional Papers.** We are indebted to the courtesy of the Hon. the Colonial Secretary for a bound volume of the Papers laid before the Legislative Council during the Session of 1891.

## கோயில் தினம்.

கஅகூ-ம்வரு ஐப்பசிமீ அ-ந்வ ஞாயிற்றுக்கிழமை

ஆசனக்கோயிலில்

| | | |
|---|---|---|
| ஜூ-ம் | பூசை | ரூவ |
| உ-ம் | ,, | கூஇ |
| கூ-ம் | ,, | அஇ |
| ஆசீர்வாதம் | | ரூவ |

சந்தியோகுமையோர்கோயிலில்

| | | |
|---|---|---|
| ஜூ-ம் | பூசை | ரூவ மணிக்கு |
| ஆசீர்வாதம் | | சஇ |

## விளம்பரம்

### ஒப்பந்தகாரர்தேவை

சென்பத்திரிசியார்கல்லூரியின் உட்பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு ஒப்பந்தத்திலே போசனங்கொடுக்க விரும்புவோருடைய கேள்விப்பத்திரங்கள் இந்த ஐப்பசிமாசம் முடிகிறவரையும் கல்லூரித் தலைவராகிய டன்சுவாயியாராலேயேற்றுக்கொள்ளப்படும். வேண்டியவிபரங்களை அவரிடங்கேட்டறிந்துகொள்ளலாம்.

---

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச்சேர்ந்த தலையாளியில் கீழேகையொப்பமிடுபவரிடம் பலவேலைக்கும் கூடிய மட்டைகழப்புகாட்டில் தறித்த முதல்தரமான முதிரைமரநகள் மிகச்சகாயமாய் ரொக்கவிலைக்கு விற்கப்படும்.

தலையாளி
அ. துரையப்பா

---

### பாலின்றிமெலியும் குழந்தைகளுக்கு.

மெலின்ஸ்பூட் என்னும் பாற்குழம்பேதாய் முலைப்பாலினும் சிறந்த சுகாதாரமான உணவென்று ஐரோப்பிய வைத்திய சங்கத்தார் சாட்சியிடுகின்றபடி உலகமெங்கும் அதுவேகுழந்தைகளுக்கு உணவாய் விட்டது. பெற்றோர் இதைக் குழந்தைகளுக்குக்கொடுப்பது உத்தமம். விலை ரூ க. சதம் கஉஇ.

வாட் அண்டுடேவிகம்பேனி மருந்துச் சாய்ப்பு நாவலர் வீடு.

யாழ்ப்பாணம்.

---

# யாழ்ப்பாணக் கத்தோலிக்குப் பாதுகாவலன்

கஅகூ-ம்வரு ஐப்பசி மீ எ-ந்வ

---

## அடைவுகாரர் கட்டளைச் சட்டம்.

நம்மிலங்கையரசினர் அடைவாகப் பொன்நகை முதலிய பொருள்கள் பெற்று வட்டிக்குப்பணங்கொடுப்பாரைக்குறித்து ஒரு கட்டளைச்சட்டமாக்க முயன்றிருக்கிறாரென்பதையறிந்துமிக்கசந்தோஷமானோம்.

கொஞ்சம்பணமுள்ளவர்கள் எளியவர்களிடத்திலே, முட்டுப்பட்டவர்களிடத்திலே, சடிதியில்வந்த அவசரதேவைக்காரரிடத்திலே தாம்கொடுக்கிறபணத்துக்கு இரட்டிமூவிரட்டி நகைமுதலியபொருள்களை அடைவாகப்பெற்றுஅப்பொருளைஒருவாறுதாமேதமக்குள் அடக்கிக்கொண்டுஅநியஞ்செய்கிறார்கள். அடைவுவைத்தவர்கள் பொருளையிழந்துகஷ்டத்தோடும் மனத்துன்போடும் பதைக்கிறார்கள். அடைவுபெற்று வட்டிக்குப்பணங் கொடுக்கிறவர்களுக்குள்ளே மிகுந்த நாணயகாரருமுண்டு. இவர்களுக் கிடையிடையே அப்பல்,பிடுங்கல், அமர்தகிகொண்டோடல் என்னுந் தொழிலையே வியாபாரமாகக் கொள்ளுகின்ற தீர்த்தகள்ளருமுண்டு. இவர்கள் அடைவுவைக்கப்பட்ட பொருளை அமர்த்திக்கொள்ளுதற்குப்பற்பலஉபாயதந்திர புரட்டுகளுருட்டுகளெல்லாஞ்செய்வர்.

தொடக்கத்திலே ஒருசதமெனப் பேசிப் பொருந்திக்கொண்டவட்டியைப் பின்னர் இரண்டு மூன்று நாலுசதமெனப்புரட்டி யேறறிக்கொள்ளுவார்கள்.

நகை யெடுக்கப்போனவிடத்திலே குறித்தகாலத்துக்குள்ளே நகையெடாமையால் விற்றுவிட்டோம் என்பார் சிலர்.

பணத்துக்குத்தேவையாய் மறுஅடைவு வைத்துவிட்டோம் அடைவு பெற்றவன் கண்டிக்கோ காலிக்கோ கல்குத்தாவுக்கோ போய் விட்டானென்றுசொல்லிக் கடத்திவிடுவார் சிலர்.

அடைவாகப்பெற்ற நகையின்பெறுமதிவரத்தக்கதாக கொடுத்தபணத்தொகையையும் வட்டம்வாசி வட்டியையுமேற்றிவிடுவார் சிலர்.

அடைவாகப்பெற்ற பலநகைகளுக்குள்சிலவற்றைஒதுக்கிக்கொண்டும்சிலவறறை பெறறதில்லையென முறறாய் மறுத்தும்விடுவார்சிலர்.

நல்லநகைகளைத் தமக்காக்கிக்கொண்டு அறறுக்குப்பதலாக உதவற்றநகைகளைகொடுத்து இதுதான்நீதந்ததும் நாம்பெற்றதுமெனச் சூது செய்வார் சிலர்.

அடைவிலேபெற்றநகையைத் தம்முடையபாவனையில்வைத்துக்கொண்டும் வட்டிபெறுவார் சிலர்.

இவ்வாறு நிதார்த்தமற்றவர்களும், பொருளவாஞ்சைக்காரரும், கபடிகளும், அநியாயவட்டிக்காரருமானவர்களுடையகையிலே எழைகளகப்பட்டுஉள்ளபொருளுமிழந்துகுட்டிச்சுவராகசிறுதொகைப்பணமுளளார் இவர்களுடையதாழ்விலே உயர்ச்சியடைகிறார்கள்.

மேலும், அடைவுபெறுகிறவர்கள் தம்முடையகாலத்திலே செய்கின்ற சூதுகள அநியாயங்கள்மாத்திரமன்றி அவர்களிறக்கச்சம்பவித்தால் அவர்களுடையஇனசனத்தார் அவ்வடைவுப்பொருளக ளெல்லாவற்றையுந் தமக்குளடக்கிவைத்துக்கொண்டு கண்டதார் கேட்டதாரெனப் பறத்திவிடுவதுமுண்டு.

இவ்வித அநீதச்செயல்கள் யாழ்ப்பாணத்தில்மாத்திரமோ இலங்கைஇந்தியாவடங்கலுமுண்டு. மன்னருப ஏசண்டராகிய மெஸ். யாக்சன்துரை இவ்வித அநியாயநகளுக்கெல்லா மொருதடைபோடவேண்டிய தவசியமென்று அரசாட்சியாருக் கெழுதினமையால்அரசாட்சியார் அதுவிஷயத்தைச்சிந்தைசெய்து அதற்காகவோர்கட்டளைச்சட்டத்தையாக்கத் தீர்மானித்து அச்சட்டத்தைக் கெசற்பத்திரிகையிலே பிரசித்தஞ்செய்திருக்கிறார்கள். அதுவருகிற சட்டநிரூபணசபையிலேகொண்டுவரவும் திருத்தவும்அரசுகேற்றவும்படும். அதன மேலேதான் அதுநடைபெறுஞ்சட்டமாகும். அச்சட்டத்தின்பொழிப்பாவது:

பொனநகைமுதலிய பொருள்களை யடைவுபெற்று ஒருமுறையிலே நூறுரூபாவுக்குமேற்படாத பணத்தொகைகொடுக்கிறவர்களையே இச்சட்டம்சாரும்.

அடைவுபெற்று பணங்கொடுப்போர் கணக்குப்புத்தகம்வைத்திருக்கவும் பெற்றநகைக்கு பற்றுச்சீட்டுக்கொடுக்கவும்வேண்டியது.

ஒருவருஷத்துக்கும் ஏழுநாளுக்குமுளளே அடைவைவெடுத்துப்போடவேண்டியது.

ஐந்துரூபாவுக்கு அல்லது அதற்குட்பட்டதொகைக்கு வைக்கப்பட்டஅடைவு ஒருவருஷமும் ஏழுநாளுக்குமிடையே யெடுக்கபடாவில் அது பறிமுதலாகும்.

ஐந்துரூபாவுக்குமேற்பட்டஅடைவுகள பிரசித்தஎலத்திலேகூறி விலைப்படவேண்டும். அது விலைபடுகிற வரையிலும் சொந்தக்காரர் மீண்டு கொள்ளலாம்.

ஐந்துரூபாவுக்குமேற்பட்டஅடைவுகளிலே கட்டளைச்சட்டத்துக்குமாறாகச் சூதுநடத்தினவர்களுக்கு பொலிசுகோர்ட்டிலே ஐம்பதுரூபாவுக்கு மேற்படாத பணத்தெண்டம் விதிக்கப்படும்.

அடைவுக்குப் பணங்கொடுப்போன் தக்கபடி கணக்குவைத்திருக்காவிடில் ஐம்பதுரூபாவுக்கு மேற்படாத பணத்தெண்டம் விதிக்கப்படும்.

அடைவுக்குப் பணங்கொடுப்பார் விலக்கவேண்டிய குற்றங்களாவன

(1)— கசு வயசுக்குட்பட்டவர்களிடத்திலே அல்லது வெறியர்டத்திலே அல்லது பற்றுச்சீட்டுக்கொடாத அடைவுவாங்கப்படாது.

(2)—வேறொருவர்கொடுத்த அடைவுப்பற்றுச்சீட்டை மாற்ற அல்லது விலைக்குவாங்கப்படாது.

(3)—உக வயசுக்குட்பட்டவனை அடைவுவாங்கும் வேலையாளாக வைத்திருக்கப்படாது.

(4)— அடைவுவைக்கப்பட்டபொருளைப் பிரசித்தஎலத்திலேயன்றி தன்னிடத்திலே யடைவாகவிருக்கும்போது அதனை விலைக்குவாங்கப்படாது.

(5)— பொருளை விலைக்குவாங்கும் நோக்கமாக அதனை அடைவாலெடுப்பிக்கப்படாது.

(6)— அடைவுவைக்க வருபவனிடம பொருளைவிலைக்குவாங்க அல்லது குறித்தகாலத்துக்குள்ளே பிரசித்த எலத்தில்விற்கப் பொருத்தஞ்செய்துகொள்ளப்படாது.

(7)—கட்டளைச்சட்டத்திலே குறிக்கப்பட்டஇடத்திலும் நேரத்திலுமன்றி வேறுவகையாக அடைவுவைத்த பொருளை விற்கப்படாது.

இவைகளைமீறிச்செய்வாருக்கு ஐம்பதுரூபாவுக்கு மேற்படாத பணத்தெண்டம் விதிக்கப்படும்.

அடைவுக்குப் பணங்கொடுக்கவுர்கள் வருஷத்திலொருமுறை இருபதுரூபாகொடுத்து ஏசண்டர்மாரிடத்தில் அல்லது உபஏசண்டர்மாரிடத்தில் லைசென்ஸ் பெறவேண்டியது.

தேசாதிபதியினாலே குறிக்கப்படுமிடங்களிலே இக்கட்டளைச்சட்டம் நடைபெற்றுவரும்.

இவைகளே யிச்சட்டத்தின் விசேஷகுறிப்புகள். இச்சட்டமானது ஊருக்குமிக்க நன்மையைப்பயக்குமென்பதற்கு சந்தேகமில்லை. இதிலும்விசேஷமானது சுடுவட்டிவாங்குவது. இவ்வியாபாரம்நடத்துகிறவர்கள்பிறரை கங்காளத்தோடேவிட்டு இரத்தமெல்லாம் உறுஞ்சுகிறவர்களாயிருக்கிறார்கள் நூற்றுக்கு இன்னவீதமாயன்றி யதற்குமேலே வட்டிவாங்கப்படாதென்று அரசாட்சியார் ஒருபிரமாணம் வைத்துவிடுவார்களானால் அது இபபோதுநடைபெறவிருக்கின்றஇச்சட்டத்திலும்பார்க்க அதிமேலானதாகக் கொள்ளப்படுமெனபதற்குச் சந்தேகமேயில்லை.

---

Jaffna F. N. S. Hospital- யாழ்ப்பாண ஆஸ்பத்துக்குதவிவைத்தியசாலை—இவ்வைத்தியசாலையின் கஅகூ-ம்ஞு றிப்போட்டு வெளிப்படுத்தப்பட்டது. இது வைத்தியசாலையின் பதினெட்டாம் றிப்போட்டாம்.

அரசாட்சியார் இவ்வருடத்திலே முன்தாம் கொடுத்துவந்த நாலாயிரம் ரூபாவுடன் ஈராயிரஞ் சேர்த்து ஆறுயிரங் கொடுத்துவரத் தீர்மானித்தனர்.

இவ்வருடத்திலே வைத்தியசாலையினுள்ளே வைத்து க,கூஙரு பேர் பரிகரிக்கப்பட்டார்கள். இவர்களுக்குள்ளே கூகூஅ பேர் சுகம் பெற்றுப்போனார். கூஉ பேரிறந்தார்.

மருந்துச்சாலைக்குவந்து மருந்து பெற்றவெளியாட்கள் கரு,கஙக பேர். நோயாளர் கொடுத்த சலாராலே வந்ததொகை க,கஙு ரூபா உடு சதம். மருந்து விற்பனையினாலே வந்தபணத்தொகை ரு,எஎரு ரூபா கூஙு சதம்.

சிவில்வைத்தியசாலையொன்று யாழ்ப்பாணத்திலுள்ள அரசாட்சி வைத்தியருக்கு அவசியம் வேண்டுமென்று அரசாட்சியாரின் வைத்திய றிப்போட்டிலே பேசப்பட்டிருக்கின்றது. வைத்தியசாலையென்றால் எவ்வைத்தியசாலையுஞ் சரியே. அதில் நமக்கு விசேஷந்தோற்றவில்லை., அவைகளை நடப்பிப்பதிலேயே விசேஷமிருக்கின்றது.. கொலோனியல் சேர்சன் ஒருவருடைய எண்ணத்துக்கு நடைபெறவதிலும் பார்க்க ஊரவர் பலருடைய எண்ணத்திலும் விருப்பத்திலும் ஒரு வைத்தியசாலை நடந்துவருவதை விசேஷமென்றே யெவருங்கொள்ளத்தகும். சிவில் வைத்தியசாலையிலே ஊரவர்களுடைய விருப்பும் வசதியும் எண்ணமுஞ் செல்லவே செல்லமாட்டா. ஆபத்துக்குதவி வைத்தியசாலையிலோ ஊரவர்களுடையு நிலைபரம் விருப்பு, இசைவு, எண்ண மிவையெல்லாங் கவனிக்கப்படும். அவற்றிலுள்ள குறை முறைகளை யெக்காலத்திலும் ஊருக்கேற்றபடி திருத்துவித்துங் கொள்ளலாம். எக்காலமும் ஒரு காலமல்ல வாகையால் திருத்துவித்துக் கொள்ளப்போதியவிடமுமுண்டாகும். ஆகையால் ஆபத்துக்குதவிவைத்தியசாலையினாலே உண்டாகக்கூடிய சுலாக்கியங்களை நாம் சிவில்வைத்தியசாலையிலே காத்திருக்கப்படாது. தற்காலமுள்ள வைத்தியசாலையே ஸ்திரமாகி யுயர்ந்த பெரும்பலனடையச் சீராய் நடைபெற வேண்டுமென்பதே யெவர்க்கு மிருக்கவேண்டிய விருப்பு.

---

## பொதுவர்த்தமானம்

Weather.—காலநிலை—புரட்டாசி மாசமும்முடிந்தது. இன்னும்மழையில்லை. மழைக்கோலம்மாத்திரமிடையிடையேதோற்றுகின்றதன்றி மழை பெய்வதாயில்லை. வெயிலுறைப்பாயெறிக்கின்றது.

---

The feast of Our Lady of the Rosary.- செபமாலைமாதாவின் திருநாள்.—ஐப்பசி மாசமுழுவதையுஞ் செபமாலைப்பத்திமாதமாகக் கொள்ளவேண்டுமென்று பரிசுத்த பாப்பாண்டவர் கற்பித்தமையாலும் கஙஎ யாகிய சென்ற ஞாயிற்றுக்கிழமை செபமாலைமாதாவின் திருநாளானமையாலும் அன்றுகாலை ஆசனக்கோயிலிலே பாடற்பூசையுடனும் திருசுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் திருநாட் கொண்டாடவும் செபமாலைப்பத்தி ஐப்பசிமாசம் ஆரம்பிக்கப்பட்டது.

---

Arch-Bishop of Colombo.- கொளும்புஅதிமேற்றிராணியாண்டவர்— மகாமேன்மைதங்கிய மேலசன் அதிமேற்றிராணியாண்டவரிப்போது பிராஞ்சுதேசத்திலிருக்கிறார். வருகிற கார்த்திகமாச முற்கூற்றிலே தம்முடைய அதிமேற்றிராசனத்துக்குப் பயணமாகப் புறப்படுவார்.

---

The Deligate Apostolic—பாப்பரசரின் ஸ்தானாபதி—இவர் திருச்சினாப்பள்ளிக்குச்சென்று அவ்விடமிருந்து மதுரைமேற்றிராணியாருடனும், குயிலன்விக்கார்ஜெனறலுடனும், தம்முடைய ஸ்தானமாகிய கண்டிமலைநாடு வந்துசேர்ந்தனர்.

---

A new shop- ஒருபுதிய சாய்ப்பு—பட்டணத்தின் நடுத்தெருவிலே, சிறீ. ச. மனுவேற்பிள்ளை இராசகாரியருடைய மேல்வீட்டுக்கு மேற்குப்பக்கத்திலே, முன்னர் இங்கிலீஷ பள்ளிக்கூடம் வைக்கப்பட்டிருந்த மண்டபத்துளே மெசர்ஸ எஸ் எஸ். வஸ்தியாம்பிள்ளையும் கூட்டாளிகளும் புதிய ஒரு சாய்ப்பு ஸ்தாபித்திருக்கிறார்கள். இங்கிலாந்திலிருந்து பலவகையான நல்ல நல்ல சாமான்களெடுப்பித்திருக்கிறார்கள். கடுதாசிகள், புடவைகள், விளக்குகள்,குடிவகைகள் இன்னுமின்னும் ஊருக்குத்தேவையானவையான பலவற்றையு மழைப்பித்திருக்கிறார்கள். சென்ற திங்கட்கிழமை சாயந்தரம் மூன்று மணிக்கு சாய்ப்பு ஆரம்பமாயிற்று. துரைமார் ஊரவர் பலரும் அவ்விடஞ்சென்று நமோசன பலசாமான்களும் வாங்கி சாய்ப்புக்காரருடைய முயற்சியை உற்சாகப்படுத்தி விட்டார்கள். இப்புதிய சாய்ப்பானது அதிக பலன்பெறப் பிரகாசமுடையதாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. ஏனெனில் பொருள்கள் நல்லவையாயிருப்பதினாலும் சீமைத்தேசத்திருந்து நேரேயழைப்பிக்கப் படுகிறபடியினாலுமாம்.

---

Medical- வைத்தியவிசாரணை—மிகுந்தாலேயிலிருக்கும் டக்டர் கைலாசபிள்ளை மன்னாருக்கும், மன்னாரிலிருக்கும் டக்டர் முத்துக்குமாரு சாவகச்சேரிக்கும் மாற்றப்பட்டார்கள்.

---

Mr. Arunasalam.- மெஸ். அருணாசலம்.— அக்றிங் றெஜிஸ்திறார் ஜெனறலான மெஸ். அருணாசலம் யாழ்ப்பாணம்வந்து தம்முத்தியோத்துளடங்கிய கந்தோர்களைப் பராவையிட்டு சென்ற செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவுக்குப் பயணமாயினார். முல்லைத்தீவிலிருந்து திரிகோணமலை, மட்டுக்களப்பு, வதுளைகண்டு, கொளும்புசெல்லவிருக்கின்றார்.

---

An accidental death.- அகாலமரணம்.— பரித்தித்துறையிலிருந்து பாதிரியார் சென்ற வெள்ளிக்கிழமை தம்முடைய உவெஸ்லியன்சபைத் தலைவரான திறிமர் ஐயரைக் கப்பலிலேற்றித் திரிகோணமலைக்குப்பயணமனுப்பிவிட்டு வண்டியேறியதிசமீபத்திலுள்ள தம்வீட்டுக்குவந்து சேருவதற்கிடையிலே மேழச்சத்தத்தினாலே குதிரை வெருண்டு அள்ளிக்கொண்டுபோக கடிவாளமுமறுந்துபோக பாதிரியார் பூர

ணவாலிபரும் தைரியசாலியுமாகையால் குதிரையைப் பிடிக்கலாமென்று வண்டியைவிட்டுக் குதிக்கவே பக்கத்திருந்த சுவரிலே நெஞ்சும் சிரசும் வலுவிலடிபட்டுஸ் மரணையுற்றுவிழ வண்டிச்சக்கரமு மவர் மேலே புரண்டுசெரிய ஐயையோ சில நிமிஷங்களாலே பாதிரியார் காலஞ்சென்றனர். அவரோடே வண்டியில்வந்த ஒரு அம்மாவும் ஒரு சிறுமியும் சீவாபத்துக்குத் தப்பினார்களாயினும்வலுகாயப்பட்டார்கள்

---

Mgr. Vistarini.- விஸ்தறினி ஆண்டவர்.— சம்மனசுசுவாமியென் றறைக்கப்படும் விஸ்தறினி ஆண்டவர் சிலநாட்களின்முன்னே அவஸ்தைபூசுதல்பெற்று காலஞ்செல்லுகின்ற நிலைபரத்திலிருந்து இப்போது சுகம்பெற்றுவருகிறாரென்பதைச் சந்தோஷத்தோடறிகின்றோம்.

---

Bathing fatality at Batticaloa.- மட்டுகளப்பிலே சிவமோசம்.— சென்ற உகூ-க்ஷ மட்டுக்கழப்பிலுள்ள ரோமான் கத்தோலிக்க பள்ளிக்கூடப்பிள்ளைகளிலே ஈரு-போரிரண்டு கடலுக்குச்சென்று முழுக்காடும்போது அவர்களுக்குள் எட்டுப்பேரை ஐயையோ! நீரள்ளி ஆளிவாய்ப்படுத்தியது. இருவர்உடாத்திமார். அந்நேரஞ் சமுகமாயிருந்த மேரிச்சுவாமியாரும், பூறிசுவாமியாரும் வெகு வலியும் திடுக்காட்டமும் ஆத்திரமும் பரபரப்புடையவர்களாகத் தம்மாலியன்ற உதவிகளெல்லாஞ் செய்து அவர்களைத் தப்புவிக்க வழிவகைகளெல்லாம்பார்த்தும் ஒன்றும் முடியவில்லை. அன்று சாயந்தரம் ஐந்துபிரேதங்களும் மறுநாட்காலை மூன்றுபிரேதங்களுங் கண்டெடுக்கப்பட்டன. இவ்வகையான அகாலமரண அசம்பவத்தாலே தங்கள்ளைகளை இறக்கக்கொடுத்து பரிதபிக்கின்ற பெற்றார் உற்றார் மற்றோரோடும், காத்திராப் பிரகாரம் சடிதியிலே சம்பவித்த இத்திடுக்காட்ட சங்கதியினாலேஎன்செய்வேம்! என்று ஏங்கி மனத்துயரடைந்திருக்கின்ற இருகுருமாரோடும் நாமும்மிகுந்த பிரயாபமடைகின்றோம். R. I.P.

---

An increase of salary.- சம்பழ உயர்வு.— இலங்கைச் சிவிலுத்தியோகஸ்தருக்கும் கிளார்க்குமாருக்குஞ் சம்பழங் கூட்டிக்கொடுக்கும்படி மந்திரியார் அனுமதிபண்ணியிருக்கிறாரெனஒருசத்தம்பிறக்கின்றது.

---

The Legislative Council.- சட்டநிரூபணசபை.— வருகிற கஅ-ங்வ புதன்கிழமை சட்டநிரூபணசபை ஆரம்பிக்கப்படுமென்பது கெசற்பத்திரிகை விளம்பரம்.

---

The Stamp Ordinance.- முத்திரைச் சட்டம்.—வருகிற கஅ-ங்வ தொடங்கி நடக்கவிருக்குஞ் சட்டநிரூபண சபையிலே முத்திரைவரிச்சட்டம ராயப்படுமென்பது பலருடைய உத்தேசம்.

---

The Chie Justice- elect- சிரேஷ்ட நீதிபரசர்—இலங்கைக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட நீதியரசர் இம்மாசு இறுதிக்குமுன் இலங்கைக்கு வரமாட்டார். இவரிடத்துக்கு சிங்கப்பூர்ச் சிரேஷ்ட நீதியரசராக மெஸ் கொகஸ் என்பவர் நியமிக்கப்பட்டார்.

---

Water from Mecca-மெக்காத்தண்ணீர்—மெக்காவுக்கு யாத்திரைபோன மகமதியர் மறுபடியும் கசுo பெட்டி தண்ணீர் கொண்டுவந்து கொளும்பிலிறக்கினார்கள். முன்போலவே யித்தண்ணீரும் பறிமுதலாய்க் கடலுக்கு ஊற்றப்பட்டது.

---

The House of Lords- பிரபுக்கள்சபை—அயர்லாந்தின் சுயவரசுச் சட்டம் நீதியானதும், சனப்பிரதிநிதிகளாலே சரியெனக் கைக்கொள்ளப்பட்டதுமாயிருக்க அதனைப் பிரபுக்கள் சபை அங்கீகரியாது தள்ளிவிட்டமையால் இனி பிரபுக்கள் சபையென்பதொன்றில்லாம லதனை யழித்துவிட்டாலோ என்று கிளாட்ஸ்டன்மந்திரியார் யோசனை செய்கின்றாராம்.

---

Sad death of Mr. M.S. Crawford.- மெஸ் கிறவ்வோட் துரையின் மரணம்—சிலகாலம் மன்னார் உதவியேசண்டராகவும் கஅஎஅ-ம் ஆண்டு தொடக்கமாக இலங்கைச் சிவில் உத்தியோகஸ்தனாகவும் வேலை பார்த்துவந்த இத்துரைமகன் கொளும்பிலே லெவினமலை விடுதிவீட்டிலே யிருந்து கடலில் குளிக்கப்போனவிடத்திலே நீரிலள்ளுப்பட்டு அமிழ்ந்தியிறந்தனரென்ற சங்கதியை யறிந்து மிக்க மனவிசனப்பட்டோம். அவர் லீவிலே இங்கிலாந்துசென்று இரண்டொருநாட்களுக்குமுன்னே தான்வந்தவர். புத்தி சாதுரியம் திறமை,நீதி, நிதானம், நியாயப்பிரமாண அறிவு இவைகளிலே விசேஷமானவர். இலங்கைச் சிவில் உத்தியோகஸ்தருக்குள்ளே அதிக பிரகாசமானவர்.

---

The Pope.-பரிசுத்தபாப்பாண்டவர்.— உலோக தம்பிராஜகிய பரிசுத்த பாப்பரசருடைய தரிசனையைப் பெறவது வரவர அரிதாகின்றது. அவர் வயதாலே பலன்கெட்டு வருகின்றார். திருச்சபை இராச்சியவேலைகளோவெனில் அதிக பாரமுடையதாயிருக்கின்றன. இதற்கிடையிலே தரிசனைபண்ணவருகிறவர்களுடைய தொல்லையைக் குறைக்கவேண்டியிருக்கின்றது.

பரிசுத்த பாப்பாண்டவர் எப்போதும் வழமையாக காலை ஐந்துமணிக்கு நித்திரைவிட்டெழுந்து தம்முடைய சிறுகோயிலிலே திவ்வியபூசை சொல்லுவார். இவர் பூசைசொல்லும் திருப்பீடத்திலே அர்ச். ஸநாபக யுவானியாருடைய திருச்சிரசை வெட்டிவைத்து ஏரோதியாளுக்குக் கொடுக்கப்பட்ட வெள்ளித்தாம்பாளம் வைக்கப்பட்டிருக்கிறது. இத்தாம்பாளத்திலே யவருடைய நாமம் வரையப்பட்டிருக்கிறது. பரிசுத்தபாப்பானவர் தாம்பூசைசொல்லியபின் வேறொரு பூசைகாண்பார்.

எட்டுமணியானபோது காலைப்போசன மருந்துவார். மூட்டை, அப்பம், ஏதும் பழவர்க்கம், சொக்கிளாத்து இவைகளே அவருடைய காலைப்போசனம். இந்தப்போசனத்தின்பின்தான் வேலைசெய்ய ஆரம்பிப்பார்.

ஒன்பதுமணிக்கு மந்திரிமார் கருதினுன்மார முதலியோருக்குத் தரிசனை கொடுக்கப்படும். இவ்வேளையிலேதான் இராச்சியபார கருமங்கள் ஆலோசனைகளெல்லாம் நடத்தப்படும். இவ்வேலைகள் மத்தியானம் ஒருமணிவரையும் நடக்கும்.

இரண்டுமணிக்கு பகற்போசன மருந்துவார். இதுவும்காலைப்போசனம்போலவேயிருக்கும்.

போசனத்தின்பின்சிலவேளைகளிலேவத்திக்கான்நந்தாவனத்துளே உலாவச்செல்லுவார். இதற்குப் புறத்தே உலாவச் செல்லவில்லை. இதற்குள்ளே அந்நியரை வரவிடுவதுமில்லை.

